Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, NOVEMBER 29, 2023

புதன்கிழமை நவம்பர் 29, 2023 | ஒளி: 09 கதிர் 138 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# வடிவேல் நீக்கம்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், கட்சியின் பசறை அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

2024 வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அதற்கு ஆதரவாக வாக்களித்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே வடிவேல் சுரேஷ் நீக்கப்பட்டுள்ளார்.



# “அழிவுக்கான ஆரம்ப புள்ளி”

என்னையும், உதய கம்மன்பிலவையும் அமைச்சு பதவிகளில் இருந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீக்கினார். அதுவே அவரது அரசாங்கத்தின் அழிவுக்கு ஆரம்ப புள்ளியானது. இந்த அரசாங்கத்தின் அழிவு ரொஷான் ரணசிங்கவை அமைச்சு பதவியில் இருந்து நீக்கியது முதல் ஆரம்பமாகியுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எதிரணி எம்.பி.யுமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கான செலவினத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் துறையின் ஊழல் மோசடியை வெளிப்படுத்தி, தற்றுணிவுடன் செயற்பட்டதால் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரம் மற்றும் நீர்பாசனத்துறை அமைச்சு பதவியில் இருந்து ரொஷான் ரணசிங்க நீக்கப்பட்டார்.

கோட்டாபயவின் நிர்வாகம் மோசமானது என்று குரல் எழுப்பப்பட்டதால் தான் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி மகுடம் சூட்டப்பட்டது. ஆனால், இன்று அனைத்தும் தலைகீழாக உள்ளது.



தொடர்ச்சி P2

## மக்கள் ஆணை கிடைத்தவரை

# “கிடைக்காதவரே நீக்கினார்”

## சஜித் விசனம், சதி செய்யவில்லை என்கிறார்

மக்கள் ஆணை கிடைக்காத ஜனாதிபதியால், மக்கள் ஆணை கிடைத்த எம்.பி. அமைச்சுப் பதவியில் இருந்து முதல் நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்திய உயர் ஸ்தானிகர் மற்றும் ரொஷான் ரணசிங்கவுடன் இணைந்து அரசியல் சதி செய்ய முயற்சிக்கவில்லை என்றார்.

கடந்த பொதுத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிபதிக்கு கொழும்பு மாவட்டத்தில் 30ஆயிரம் வாக்குகளே கிடைத்தன. ஆனால், ரொஷான் ரணசிங்கவுக்கு 90,600 விருப்பு வாக்குகள் கிடைத்தன என்றார்.



தொடர்ச்சி P2



“4 உறுப்பினர்களை கொண்ட ஒரு குடும்பம் தனது அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒரு மாதத்துக்கு 74 ஆயிரம் ரூபாவை செலவிட வேண்டியுள்ளது என புள்ளிவிபரவியல் திணைக்களம் குறிப்பிடுகிறது.

# தொழிலாளர்களுக்கு ரூ.2,500 வழங்கவும்

அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வாழ்க்கை செலவுக் கொடுப்பனவை அதிகரித்து வழங்க ஒரு மாதத்துக்கு 133 பில்லியன் ரூபாவை செலவழித்து விட்டு, அரச சேவையாளர்கள் உட்பட ஒட்டுமொத்த சேவை தரப்பினரிடமிருந்து மாதாந்தம் 1094 பில்லியன் ரூபாவை வரி வருமானம் ஊடாக பெற அரசாங்கம் திட்டமிட்டுள்ளதென ஜே.வி.பி. எம்.பி.யான விஜித ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வவுனியா மாவட்டத்தில் ‘போகஸ்வேவா’

# குடியேற்றம்



கல்முனை தமிழ் பிரதேச செயலக கோரிக்கை விடயத்தில் யாருடைய வாக்குகள் தேவை என்று ஆட்சியாளர்கள் நினைக்கின்றார்களோ அவர்களின் பக்கமே நிற்கின்றார்கள் எனத்தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.யான தா.சித்தார்த்தன்

தொடர்ச்சி P2

# “சஜித்தை சந்தித்து பேசியது உண்மை”

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்னை அழைத்தார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்குச் சென்றபோது அங்கு, எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவும் இருந்தார். அத்துடன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரும் இருந்தார் என முன்னாள் விளையாட்டுத்துறை, நீர்பாசனம் மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

சிறப்புரிமை மீறல் பிரச்சினையை பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (28) முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

என்னை தொடர்பு படுத்தி ஜனாதிபதி ஊடக மையம் திங்கட்கிழமை வெளியிட்ட பொய்யான செய்தியை சுட்டிக்காட்டி சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைக்கிறேன்.

ஜனாதிபதி ஊடக மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ‘விளையாட்டுத்துறை மற்றும் நீர்பாசனத்துறை அமைச்சு தொடர்பில் ஜனாதிபதி எழுப்பிய கேள்விகளுக்கு விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் உரிய பதிலளிக்காத காரணத்தால் அவர் பதவி நீக்கப்பட்டார்’ என குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# மாவீரர்களுக்கு கப்பம் கேட்ட மச்சான் கைது

கனகராசா சரவணன்

மாவீரர் தின நிகழ்வுகளுக்கு மைத்துனனிடம் 15 இலட்சம் ரூபாய் கப்பம் கேட்ட, 41 வயதான மைத்துனன் (மச்சான்) கைது செய்யப்பட்டுள்ள சம்பவமொன்று மட்டக்களப்பு, வாழைச்சேனையில் இடம்பெற்றுள்ளது.

திங்கட்கிழமை (27) கைது செய்யப்பட்டு, வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள குறுவாக்கேணி பிரதேசத்தைச் சேர்ந் ஒருவருக்கு 2021ஆம் ஆண்டு அதிர்ஷ்டலாபச் சீட்டின் மூலம் 10 கோடி ரூபாய் பணப்பரிசு கிடைத்துள்ளது.

அதிர்ஷ்டலாபச் சீட்டின் மூலம் கிடைத்த பணத்தில் தனக்கும் ஒரு பங்கை தருமாறு, அடிக்கடி தொந்தரவு செய்து வந்துள்ளார்.

தொடர்ச்சி P2

# நீருக்கு சூத்திரம்

நீர் கட்டணங்களுக்கான சூத்திரத்தைத் தயாரிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாக நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை (27) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை கூறினார்.

உத்தேச நீர் கட்டண சூத்திரத்தை டிசெம்பர் மாதத்தில் தயாரித்து முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# “இணைந்தால் தேர்தலுக்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும்”

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் இணைந்து செயல்படுவதன் மூலம், மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என பிரதமரும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# பொருளாதார குற்றவாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா?

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், லக்ஷ்மன் ஆகியோரை பொருளாதார குற்றவாளிகளாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், இவர்களுக்கு தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுமா என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான நிரோஷன் பெரேரா கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான நிரோஷன் பெரேரா மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.



தொடர்ச்சி P2

# நாணய பெட்டகத்தில் இருந்து 50 இலட்சம் ரூபாய் மாயம்

இலங்கை மத்திய வங்கியின் ‘நாணய வழங்கல் பெட்டகத்தில்’ வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபாய் காணாமல் போயுள்ளமை தொடர்பில் தீவிர புலனாய்வு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (28) எதிர்க்கட்சி எம்.பி.யான நிரோஷான் பெரேரா கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்



# “அழிவுக்கான ஆரம்ப புள்ளி”

போராட்டத்தின் ஊடாக ஜனாதிபதி மகுடம் சூடிய ரணில் விக்ரமசிங்க தனது உண்மை முகத்தை திங்கட்கிழமை காண்பித்துள்ளார்.

பொருளாதார பாதிப்பு தொடர்பில் கவனம் செலுத்தாமல் சிறுப்பிள்ளை போல் கடந்த அரசாங்கம் செயற்பட்ட போது அதனை சுட்டிக்காட்டினோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டார் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றேன். தற்போதைய நெருக்கடி சூழ்நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சர்வதேச நிறுவனங்களில் உயர் பதவியைப் பெற்றுக்கொள்வார். நாட்டின் எதிர்காலம் குறித்து அவருக்கு அக்கறையில்லை என்றார்.

# “கிடைக்காதவரே நீக்கினார்”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (28) ரொஷான் ரணசிங்கவை அமைச்சுப்பதவியில் இருந்து நீக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்த தீர்மானம் தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழல்,மோசடி ,திருட்டுக்களை வெளிப்படுத்திய ரொஷான் ரணசிங்கவை அமைச்சுப்பதவியிலிருந்து நீக்கிய ஜனாதிபதி, ஊழல், மோசடி,திருட்டுக்களில் ஈடுபடும் திருடர்களைப் பிடிக்கவேண்டாம். அனைத்துக்கும் ஆமாம் என்று தலையாட்டினால் மட்டுமே அமைச்சர்களாக தங்களின் இருப்பை பாதுகாத்துக்கொள்ளலாம் என்ற சிவப்பு எச்சரிக்கையை அமைச்சரவைக்கு விடுத்திருக்கிறார்.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபையை நீக்கி, புதிய நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என பாராளுமன்றத்தில் ஆளும், எதிர்க்கட்சியால் இணைந்து பிரேரணை நிறைவேற்றப்பட்டது. ஆளால், தற்போது இந்த பிரேரணையைக் காலால் உதைத்துவிட்டு, கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகளை வெளிப்படுத்திய அமைச்சரை நீக்கிவிட்டுத் திருடிய குழுவை ஜனாதிபதி பாதுகாத்துள்ளார்.

இன்று 225 எம்.பி.க்களும் நிறைவேற்று அதிகாரியின் இரும்பு சப்பாத்துக்களால் மிதிக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இன்று பாராளுமன்றத்தை மதிப்பதில்லை. தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கி இருந்தது. அந்த தீர்ப்பைப் புறந்தள்ளியுள்ளார். . ஊழல் மிக்க கிரிக்கெட் சபையை நீக்குமாறு பாராளுமன்றம் பிரேரணை ஒன்றை நிறைவேற்றியிருந்தது. அதனையும் புறந்தள்ளியுள்ளார்.

மக்களாணை இல்லாத இந்த ஜனாதிபதியைப் பாராளுமன்றத்தில் உள்ள 134பேரே நியமித்தனர்.. ஆனால் அவரை மறைமுக சக்தி ஒன்று இயற்றிக்கொண்டிருக்கிறது. நாட்டில் இருக்கும் காஸ் மாபியா, மருந்து மாபியா தற்போது கிரிக்கெட் மாபியா இவர்களே யார் அமைச்சு பதவியில் இருக்க வேண்டும் என தீர்மானிக்கின்றனர்..

இதேவேளை இந்திய உயர்ஸ்தானிகர் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் என்னுடன் கலந்துரையாடிக்கொண்டிருந்தார். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு விளையாட்டுத்துறை அமைச்சராகவிருந்த ரொஷான் ரணசிங்கவையும் அழைத்துக்கொண்டு இந்திய உயர் ஸ்தானிகருடன் இணைந்து எமது நாட்டு கிரிக்கெட்டுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கிக்கொள்ளவே முயற்சித்தேன். மாறாக இந்திய உயர் ஸ்தானிகர் மற்றும் ரொஷான் ரணசிங்கவுடன் இணைந்து அரசியல் சதி செய்ய முயற்சிக்கவில்லை .

அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறினார் என்ற குற்றச் சாட்டில் ரொஷான் ரணசிங்கவை பதவி நீக்கம் செய்வதாக இருந்தால், என்னை சந்திக்க வரும் தற்போதைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பலரையும் பதவியில் இருந்து நீக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி சதித்திட்டம் செய்து ஆட்சி அதிகாரத்தைப் பெறப்போவதில்லை. மக்கள் ஆணையின் மூலமே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்றார்.

# தொழிலாளர்களுக்கு ரூ.2,500 வழங்கவும்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கான செலவின தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

4 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒரு மாதத்துக்கு 74 ஆயிரம் ரூபாவை செலவிட வேண்டியுள்ளது என புள்ளிவிபரவியல் திணைக்களம் குறிப்பிடுகிறது.75 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் எத்தனை அரச சேவையாளர்கள் உள்ளனர்?ஒரு பட்டதாரி அரச சேவையாளரின் அடிப்படை சம்பளம் 31 ஆயிரம் ரூபாவாகவே உள்ளது.

அரசாங்கத்தின் புதிய வரி விதிப்பால் அரச சேவையாளர்கள் மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்படுவார்கள்.அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க ஒரு மாதத்துக்கு 133 பில்லியன் ரூபாவை செலவழித்து விட்டு,அரச சேவையாளர்கள் உட்பட ஒட்டுமொத்த சேவை தரப்பினரிடமிருந்து மாதாந்தம் 1094 பில்லியன் ரூபாவை வரி வருமானம் ஊடாக பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நான்கு பேர் உள்ள குடும்பத்துக்கு 74 ஆயிரம் ரூபாய் ஒரு மாதத்துக்குத் தேவை என்று குறிப்பிடுகின்ற நிலையில் 10 ஆயிரம் ரூபாய் குறைந்தபட்ச வாழ்க்கை செலவு கொடுப்பனவு அதிகரிப்பு ஒருபோதும் சாதகமாக அமையாது என்பதால் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அரச சேவையாளர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

பெருந்தோட்ட மக்கள் பாரிய போராட்டத்துக்கு மத்தியில் 1000 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் இன்று 1000 ரூபாய் ஒருநாள் செலவுகளுக்கு போதுமா? குறைந்தபட்சம் 2500 சம்பளத்தை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

# வவுனியா மாவட்டத்தில் ‘போகஸ்வேவா’ குடியேற்றம்

அத்துடன், போகஸ்வேவா என்ற குடியேற்றத்திட்டத்தின் மூலம் வவுனியா மாவட்டத்தின் குடிப்பரம்பலை மாற்றுவதற்கான முழுமையான முயற்சி எடுக்கப்படுவதாகவும் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டினார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த மாகாணங்களில் மாகாண சபைத்தேர்தலை ஓர் அதிகாரப் போட்டியாகவே பார்க்கின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த தேர்தல் மிக முக்கியமானது சிறிதளவாவது நாம் எமது பகுதிகளில் இருக்கக்கூடிய விடயங்களைக் கையாளக்கூடிய ஒரு சபையாகவே மாகாணசபையை பார்க்கின்றோம். இந்த மாகாணசபை முறைமை ஒரு முழுமையான தீர்வாக இருக்க முடியாது விட்டாலும் அதனை கொண்டு வர வேண்டுமென நாம் பல தடவைகள் கேட்டு வருகின்றோம். தற்போது பிரதமரும் எதிர்க்கட்சி தலைவரும் இந்த தேர்தலை நடத்தத்தான் வேண்டும் என்பதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். நாமும் இந்த மாகாண சபைகளுக்கான a நடத்த வேண்டுமெனக் கேட்கின்றோம்.

நாம் எந்த பிரச்சினையைக் கொண்டு சென்றாலும் அதனைக் கரிசனையோடு கேட்டுத் தீர்த்து வைப்பவர் பிரதமர் தினேஷ் குணவர்தன.

நல்லாட்சி அரசில் நாம் சுன்னாகத்தில் ஒரு தபாலகத்தை அமைக்க வேண்டுமென விடுத்த கோரிக்கையை ஏற்று அதற்கு நிதி ஒதுக்கியவர் அப்போதைய அமைச்சர் மனோ கணேசன். அடிக்கல் 2019ஆம் ஆண்டு நாட்டப்பட்டது.

அப்போது அரச அதிபராக இருந்த வேதநாயகன் அதற்கான ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டு ஒப்பந்தகாரர்களிடம் 2019ஆம் ஆண்டு மார்கழி மாதம் இந்த நிர்மாணம் முடிய வேண்டுமென அறிவுறுத்தியிருந்தார். அந்த கட்டிட நிர்மாணம் முடிவு பெறவில்லை. ஆனால் முடிவுற்றதாகச் சான்றிதழ் வழங்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டினார்.

# “சஜித்தை சந்தித்து பேசியது உண்மை”

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் திங்கட்கிழமை பாராளுமன்ற கட்டிடத்தில் 3 ஆம் இலக்க அறையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது பதவி விலக்கல் தொடர்பான கடிதம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பிடப்பபட்டுள்ளது, பாராளுமன்ற கட்டிடத்தில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ‘ கிரிக்கெட் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரை சந்தித்து ,இந்திய உயர்ஸ்தானிகர் ஊடாக இந்திய கிரிக்கெட் சபையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட ஏன் நடவடிக்கை எடுத்தீர்கள்’ என என்னிடம் கேள்வியெழுப்பியதாக ஜனாதிபதி ஊடக மையம் அறிக்கை வெளியிட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த போது நான் அவரை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோன். எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச என்னுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று குறிப்பிட்டு அவரது காரியாலயத்துக்கு அழைத்தார். நான் எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்துக்குச் சென்றேன்.அப்போது இந்திய உயர்ஸ்தானிகரையும் அவர் அழைத்திருந்தார்.அதனை நான் ஏன் என்று கேட்கவில்லை. இலங்கை கிரிக்கெட் விவகாரத்தில் இந்தியா தலையிட்டுள்ளது, என்று குறிப்பிடப்படுகிறது. இந்திய கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரி ஜெய்ஷாவின் பெயரை கிரிக்கெட் சபை குறிப்பிடுகிறது. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள இடைக்கால குழு அவருடன் ஒன்றிணைந்து செயற்படுவது எவ்விதத்திலும் பிரச்சினையில்லை,ஏதும் பிரச்சினைகள் உள்ளதா ‘ என்பது தொடர்பில் மாத்திரமே பேசப்பட்டது.

ஜனாதிபதி எழுப்பிய கேள்விகளுக்கு நான் பிழையாக பதிலளித்ததாக ஜனாதிபதி ஊடக மையம் குறிப்பிட்டுள்ளது என்றார்.

# மாவீரர்களுக்கு கப்பம் கேட்ட மச்சான் கைது

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (27) வீட்டுக்குச் சென்ற மைத்துனன். மாவீரர் தின நினைவேந்தலுக்கு 15 இலட்சம் ரூபாவை கப்பமாக கோரியுள்ளார். இதுதொடர்பில், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, கப்பம் கோரிய நபரை பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# நீருக்கு சூத்திரம்

இதனூடாக மதவழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்கு நியாயமான கட்டணத்தின் அடிப்படையில் நீரை விநியோகிக்க முடியும் என அவர் கூறினார்.

வணிக நிறுவனங்களுக்கான நீர் கட்டண சூத்திரம் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

# பொருளாதார குற்றவாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா?

மத்திய வங்கி அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகிறது. அவ்வாறான நிலையில் மத்திய வங்கியின் நாணய பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ள நிதி காணாமல் போயுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் சேவையில் இருந்து ஓய்வுப் பெறுவதற்கு முன்னர் ஆளுநர்களுக்கான சம்பளத்தை 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் இருந்து 4 இலட்சமாக அதிகரித்துக் கொண்டார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால்,பேராசிரியர் டபிள்யூ.டி லக்ஷ்மன் ஆகியோர் பொருளாதார குற்றவாளிகள் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில் இவர்களுக்குத் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்குவது நியாயமானதா? மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு இவர்களுக்குத் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்குவதை இடைநிறுத்த அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், லக்ஷ்மன் ஆகியோருக்கு ஓய்வூதிய கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் அமைச்சு மட்டத்தில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர், சட்டமா அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுக்க முடியும் என்றார்.

# நாணய பெட்டகத்தில் இருந்து 50 இலட்சம் ரூபாய் மாயம்

இலங்கை மத்திய வங்கியின் ‘நாணய வழங்கல் பெட்டகத்தில்’ வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபா காணாமல் போயுள்ளது உண்மைதான். இதற்கு பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளம் காண்பதற்காக புலனாய்வு விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

கொழும்புக் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாகவும், மத்திய வங்கியின் உதவி ஆணையாளர் ஊடாகவும் உள்ளக மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் முடிவில் தான் யார் 50 இலட்சத்தை கையகப்படுத்தியது என்பதை அறிய முடியும். அது தொடர்பான அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

இலங்கை மத்திய வங்கியின் ‘நாணய வழங்கல் பெட்டகத்தில்’ பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப் படவில்லை. அத்துடன், மத்திய வங்கியின் பாதுகாப்பு கமரா கட்டமைப்பில் பதிவாகியுள்ள காட்சிகள் புலனாய்வு விசாரணை நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளன. மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய வங்கியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# “இணைந்தால் தேர்தலுக்கான...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கூறுகையில், மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. எனினும் கடந்த எட்டு மாதங்கள் காலதாமதமாகி இன்னும் அந்த தேர்தல் நடத்தப்படவில்லை நாட்டு மக்கள் தேர்தலை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் . எனவே தேர்தல் நடத்தப்படுமா என்பது தொடர்பில் பிரதமர் தெரிவிக்க வேண்டும் என்றார். இதற்கு பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன,

தற்போது மாகாண சபை தேர்தலை நடத்துமாறு குரல் எழுப்பும் லக்ஷ்மன் கிரியெல்ல அப்போது அவர் சபை முதல்வராக பதவி வகித்த போது அதற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். அவர்கள் கொண்டு வந்த சட்டத்தின் விளைவாகவே இன்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

# காசாவில் சிக்கித் தவித்த குடும்பம் நாடு திரும்பியது

காசா பகுதியில் சிக்கித் தவித்த நான்கு பேர் கொண்ட இலங்கை குடும்பம் பத்திரமாக நாட்டை வந்தடைந்துள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் குடும்பத்தை நாட்டிற்கு மீள அழைத்து வருவதற்குரிய வசதிகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு மேற்கொண்டிருந்தது.

நாடு திரும்பிய இலங்கையர்கள் வெள்ளிக்கிழமை (24) கொழும்பை வந்தடைந்தவுடன், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் அவர்களை வரவேற்றனர்.

கெய்ரோவில் உள்ள இலங்கை தூதரகத்தின் அதிகாரிகள், எகிப்திய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, எகிப்துக்கும் காசாவுக்கும் இடையிலான ரஃபா எல்லைக்கு சென்று சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை மீட்டுள்ளனர்.

# கண்ணிவெடி அகற்ற ஜப்பான் ஆதரவு

இரு கண்ணிவெடி அகற்றும் செயற்றிட்டங்களுக்கான நன்கொடை வழங்கும் உடன்படிக்கையில் *Mines Advisory Group (MAG)* இன் இலங்கைக்கான பணிப்பாளர் கிறிஸ்டி மெக்லென்னன் மற்றும் *HALO Trust* இன் நிகழ்ச்சி முகாமையாளர் ஸ்டீபன் ஹோல் ஆகியோருடன் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, கைச்சாத்திட்டுள்ளார்.

*"Grant Assistance for Grassroots Human Security Projects (GGP)"* இன் கீழ் இந்த நிதி உதவி வழங்கப்படுவதுடன், இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு திங்கட்கிழமை (27) நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், MAG மற்றும் HALO Trust ஆகியவற்றுடனான இந்த இரு திட்டங்களுக்காக 729,925 அமெரிக்க டொலர்களை (சுமார் ரூ. 238 மில்லியன்) ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

2002ஆம் ஆண்டு முதல் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் பெருமளவு நன்கொடைகளை வழங்கி வருவதுடன், இதுவரையில் வழங்கியுள்ள மொத்தத் தொகை 44 மில்லியன் அமெரிக்க டொலர்களைவிட அதிகமாகும் என கூறப்படுகின்றது.

# மாணவர்களுக்கு ஐஸ் விற்றவர் கைது

■ பாறுக் ஷிஹான்

பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் போதைப்பொருள் உட்பட பல்வேறு போதைப்பொருட்களை நீண்ட காலமாக விற்பனைச் செய்துவந்த ஒருவரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருள் வியாபாரி நடமாடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது, 43 வயதான சந்தேகநபரை ஒரு தொகை ஐஸ் போதைப்பொருளுடன் திங்கட்கிழமை (27) மாலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதானவரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பசறை தொகுதி அமைப்பாளர் நியமனம்



■ பிரசாந்த்

ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தொகுதி அமைப்பாளராக லெட்சுமனார் சஞ்சய் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமன கடிதம், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை காரியாலயத்தில் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நியமனம் தொடர்பில் அவர் கூறுகையில், "ஊவா மாகாணத்தில் குறிப்பாக பசறை தொகுதியில் மக்களுக்குச் சேவையாற்ற ஒழுங்கான தலைமைத்துவம் கிடையாது. இளைஞர்களின் கைகளிலேயே மாற்றம் தங்கியுள்ளது. இத்தனை காலமும் பதுளை மக்களுக்கு நான் ஆற்றிய சேவைகள் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

# "போதைப் பொருளற்ற தேசத்தை உருவாக்குவோம்"



■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் "போதைப்பொருளற்ற தேசத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வு நாடகம், தர்மபுரம் பகுதியில் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் இணைப்பாளர் வள்ளிபுரம் வாசுகி தலைமையில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்றுள்ளது.
போதைப்பொருளில் இருந்து விடுபட்டு, சுக தேசியாகவும் நலமாகவும் நோயற்றவர்களாகவும் வாழவும், சந்தோசமான வாழ்க்கையை வாழ என்ன செய்யவேண்டுமென நாடகத்தின் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

# வீதியில் மண் சரிவு மாணவர்கள் அவதி



■ செ.தி.பெருமாள்

கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக ஹட்டன் கல்வி வலய கோட்டம் மூன்றில் இயங்கும் மஸ்கெலிய மாமா/ஹவ் மொக்கா தமிழ் வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவுக்கு செல்லும் பாதையில் பாரிய மண்மேடு சரிந்து சுமார் இருபது அடி வரை மண் குவிந்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு வேறு பாதை இல்லாத காரணமாக அந்தப் பாதையிலேயே செல்வதால் அவர்களின் உடைகள் சகதி படிந்து விடுவதாகவும் சில மாணவர்கள் குறித்த பாதையில் செல்ல முடியாத நிலையில், தடுமாறி விழுந்து பாடசாலை செல்ல முடியாமல் வீடு திரும்பியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், அவ்வழியே தமது அன்றாட பணிக்காக. செல்லும் பிரதேச மக்களும் மாற்றுப் பாதையின்றி பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# கணவனின் மரணத்தில் மனைவிக்கு சந்தேகம்



■ ஆ. ரமேஷ்

இராகலை நகரில் வைத்து நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட கடை ஒன்றின் உரிமையாளர், நீர்கொழும்பு சிறைச்சாலையில் தன்னுயிரை மாய்த்துக் கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இராகலை மத்திய பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கோவிந்தசாமி கிருஷ்ணகுமார் (வயது 40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இராகலை நகரில் சுமார் எட்டு வருடங்களாக ஹாட்வெயார் கடை ஒன்றை நடத்தி வந்த கோவிந்தசாமி கிருஷ்ணகுமார், நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் சுமார் ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைக் கடனாக கொள்வனவு செய்துள்ளார்.

இவர் பெற்ற கடனை செலுத்துவதில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவருக்கு எதிராக நீர்கொழும்பு நீதிமன்றில் வழக்கு ஒன்றும் தொடரப்பட்டு, வர்த்தகருக்கு வழங்கப்பட வேண்டிய கடன் பணத்தைத் தவணை முறையில் செலுத்தியுள்ளார்.

கோ.கிருஸ்ணகுமார் இரண்டுமுறை ஆஜராகாத நிலையில், அவருக்கு நீதிமன்றம் பிடி விறாந்து பிறப்பித்திருந்தது.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, நீர்கொழும்பு பொலிஸார் கடந்த 23.11.2023 அன்று இராகலையில் வைத்து கிருஸ்ணகுமாரை கைது செய்து இராகலை பொலிஸ் நிலையத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

பின்னர் வலப்பனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, இவரை 29.11.2023 வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, பதுளை சிறைச்சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு குடும்பத்தாரை சந்தித்து, தன்னை நீர்கொழும்பு நீதிமன்றில் புதன்கிழமை ஆஜர்படுத்துவதாகவும் அங்கு என்னை பிணை எடுக்க நடவடிக்கை எடுங்கள் என்றும் கிருஸ்ணகுமார் தெரிவித்ததாக குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், 26.11.2023 இரவு இராகலை பொலிஸார், கிருஸ்ணகுமாரின் வீட்டுக்கு வருகை தந்து, கிருஷ்ணகுமார் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தூக்கிட்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்ட நிலையில், சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, வைத்தியசாலைக்கு சென்ற கிருஸ்ணகுமாரின் மனைவி, தனது கணவரின் உயிரிழப்பில் சந்தேகம் நிலவுவதாக நீதவானிடம் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்திற்கு பொலிஸார் விரைவாக அறிக்கை சமர்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டதாகவும் கிருஸ்ணகுமாரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆடை மாற்றுவதை வீடியோ எடுத்தவர் கைது



உடுகம வைத்தியசாலையில் தாதி ஒருவர் ஓய்வறையில் ஆடை மாற்றும் போது அதை கைத்தொலைபேசியில் காணொளியாக பதிவு செய்த அதே வைத்தியசாலையின் ஊழியர் ஒருவர் உடுகம பொலிஸாரால் திங்கட்கிழமை (27) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் வலஹந்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட தாதி ஓய்வறையில் ஆடை மாற்றும் போது காணொளி எடுக்கப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபரை கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை உடுகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கடற்றொழில் பாதிப்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் பாரியளவில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

புதிய காத்தான்குடி, ஏத்துக்கால், பூநொச்சிமுனை, நாவலடி உட்பட பல கரையோர பிரதேசங்களில் இவ்வாறு கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் கடற்றொழில் நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மீனவர்கள் அன்றாட வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.




மகளிர் தொழில்முனைவோர் 2023 இல் பங்கேற்க இலங்கையின் மகளிர் தொழில்முனைவோருக்கு அழைப்பு!!
ம.தொ.வ.ச பிரதிபாபிஷேக
மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2023
விண்ணப்ப வகைகள்: வணிக விருதுகள் - தொடக்க, மைக்ரோ, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய. மாகாண விருதுகள் - ஒவ்வொரு மாகாணத்திலும் சிறந்தவை.

வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் டிஜிட்டல் தொழில்முனைவோர், புத்தாக்கமுள்ள தொழில்முனைவோர், சமூக தொழில்முனைவோர், சிறந்த ஸ்டார்ட் அப், மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த தொழில்முனைவோர், மிகவும் நேர்மறையாகத் திறன் கொண்ட தொழில்முனைவோர், இளம் பெண் தொழில்முனைவோர் மற்றும் 2023 ஆம் ஆண்டின் மிக விரும்பப்படும் பெண் தொழில்முனைவோர் போன்ற சிறப்பு விருதுகளுக்கு பரிசீலிக்கத் தகுதியுடையவர்கள்.

என்ட்ரி கிட்டினை www.wcicsl.lk தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட என்ட்ரி கிட்டினை தொடர்புடைய இணைப்புகளுடனும் WCIC க்கு நுழைவுக் கட்டணச் சான்றுடனும் 2023 டிசெம்பர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

அனுசரணையாளர்கள்
பிளட்டினம் | டயமன்ட் | கோல்ட் | ப்ரோன்ஸ்
AIA HEALTHIER, LONGER, BETTER LIVES | DFCC Aloka | McLARENS GROUP | MAS | Hayleys | asianpaints | IMPRA | DANKOTUWA | DIMO | NIBM
ஊடக பங்காளர்-அச்சு / சமூக ஊடகம்
LANKA WOMAN | SUNDAY TIMES | DailyMirror | Daily FT | தமிழ்Mirror | Daily FT ONLINE | DailyMirror ONLINE | தமிழ்Mirror ONLINE
இணையும் இலத்திரனியல் பங்காளர்கள் | அறிவுசார் பங்காளர் | தொடர்பாடல் பங்காளர்
SUN FM | GOLD FM | EY Building a better working world | triad

மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தைக்கு அருகாமையில், கொழும்பு 07, இலங்கை, தொ.பே: 0112671762, மொபைல்: 0766848080

# உழைப்பை சுரண்டும் கம்பனிகளும் குளிர்காயும் தலைமைகளும்

ஜனாதிபதியால் 2024ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ள வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக்கான கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை போதாது என்றும் 20 ஆயிரம் ரூபாயை அதிகரிக்குமாறு கோரியும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அறிவிக்கப்பட்டிருக்கும் இந்த தொகை, 2024 ஏப்ரல் மாதத்தில் இருந்தே வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. அப்படியாயின், அத்தொகை கிடைக்கும் வரையிலும் பெரும் சந்தேகமே ஏற்பட்டுள்ளது. அதற்குள் ஏதாவது தில்லு முல்லு செய்து மாற்றிக்கொண்டுவிடுவர். எனினும், கொடுப்பனவை அதிகரிக்கக் கோரி, ஆங்காங்கே போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கொடுப்பதைப் போல கொடுத்துப் பிடுங்கி திண்ணும் நிலைமையே நமது நாட்டில் ஏற்பட்டுள்ளது. எரிபொருள், சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கிடுகிடுவென அதிகரிக்கப்பட்டன. அவ்வப்போது குறைக்கப்பட்டன. கூட்டிய விலைகளில் இருந்து குறைக்கப்பட்ட விலையைக் கழித்தால், விலைகள் அதிகரிக்கப்பட்டமையே கூடுதலாகும். எனினும், குறைத்துவிட்டோமென அரசாங்கம் மார்த்தட்டி கொள்கின்றது.

இதனால்தான், அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வாழ்க்கை செலவுக் கொடுப்பனவை அதிகரித்து வழங்க ஒரு மாதத்துக்கு 133 பில்லியன் ரூபாவை செலவழித்து விட்டு, அரச சேவையாளர்கள் உட்பட ஒட்டுமொத்த சேவை தரப்பினரிடமிருந்து மாதாந்தம் 1094 பில்லியன் ரூபாவை வரி வருமானம் ஊடாக பெற அரசாங்கம் திட்டமிட்டுள்ளதென ஜே .வி .பி. எம்.பி.யான விஜித ஹேரத், பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அடுத்த வருடம் ஆரம்பத்தில் இருந்து பெறுமதி சேர் வரி (வற்வரி) உட்பட, பல வரிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இது, அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலைகளின் மீது நேரடியான தாக்கத்தைச் செலுத்தும். அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின், பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும். ஆகையால், விஜித எம்.பியின் யூகம், அச்சொட்டாக நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

இதற்கிடையே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பாடு, பெரும்பாடாக உள்ளது. உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படுவதே இல்லை. நாளொன்றுக்கு 1,000 ரூபாய் சம்பளத்தை வழங்கவேண்டுமென அறிவிக்கப்பட்டாலும், நிறுவனங்கள் பல அவற்றை மறந்தே செயற்படுகின்றன. தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கேற்ப தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படவேண்டும் என்பதே உண்மையாகும்.

எனினும், பெருந்தோட்டத் தொழிலாளர்களை சந்தாக்காரர்களாக கொண்டிருக்கும் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களுக்காக முதலைக்கண்ணீர் வடிக்கத் தொடங்கியுள்ளன. முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு நடத்துவோம். இல்லையேல் தொழிலாளர்களை ஒன்றிணைத்துக்கொண்டு போராட்டத்தில் ஈடுபடுவோமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எச்சரித்துள்ளது.

அதாவது மக்களின் துன்பத்தில் குளிர்காயவே 'சேவல்' முயற்சிக்கின்றது. பேச்சுவார்த்தையில் பிரதான பாத்திரத்தை வகிக்கும் இ.தொ.கா, தொழிலாளர்களை வீதியில் இழுத்துவிடாமல், பிரச்சினைகளுக்கு உகந்த தீர்வினை பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும். ஏனைய தொழிற்சங்கங்கள் அதற்கு ஒத்துழைப்பை நல்கவேண்டும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




எம்.எஸ்.எம். ஐயூப்

பொலிஸ் மா அதிபருக்கு

## ஏன் இத்தனை சேவை நீடிப்புக்கள்?

நாட்டின் ஜனாதிபதி எதேச்சதிகாரமாக நடந்து கொள்வதை ஓரளவுக்காவது கட்டுப்படுத்துவதற்காகவே அரசியலமைப்புச் சபை நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது அச்சபை முழுமையாக இயங்க முடியாத நிலை ஏற்பட் டுள்ளது. காரணம் சிறிய கட்சிகளின் சார்பில் அதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினருக்கு சபையின் உறுப்பினர் நியமனம் வழங்கப்படாமையே.

அண்மையில் இந்த விடயம் பாராளுமன்றத்தில் எழுந்தபோது கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, சிறு கட்சிகளின் சார்பில் தமிழரசுக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள புளோட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனை அரசியலமைப்புச் சபைக்கு நியமிப்பதென சம்பந்தப்பட்ட கட்சிகள் சபாநாயகருக்கு தெரிவித்துள்ள போதிலும் சபாநாயகர் அந்த நியமனத்தை வழங்காமல் இருப்பதே பிரச்சினையாக இருப்பதாக தெரிவித்தார்.

சிறு கட்சிகள் தமது பிரதிநிதியின் பெயரை அரசியலமைப்புச் சபைக்கு பரிந்துரைக்காமல் இருப்பதால் அரசியலமைப்புச் சபை முறையாக இயங்க முடியாமல் இருப்பதாகவும் அதனால் புதிய பொலிஸ் மா அதிபரையோ உயர் மட்ட நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளையோ நியமிக்க முடியாமல் இருப்பதாக ஜனாதிபதி கூறியதை அடுத்தே ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சித் தலைவரின் கட்சியினதும் ஏனைய சிறு கட்சிகளினதும் பிரதிநிதிகளான நான்கு எம்.பிக்கள் மற்றும் பாராளுமன்றத்துக்கு வெளியிலிருந்து நியமிக்கப்படும் மூவர் ஆகிய பத்து பேர் உள்ளடக்கப்பட்டே அரசியலமைப்புச் சபை அமைகிறது. சிறு கட்சிகளுள் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள், மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் அடங்குகின்றன. அவற்றின் சார்பிலேயே சித்தார்த்தன் பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்றே ஹர்ஷ டி சில்வா கூறினார்.

அவ்வாறு பரிந்துரைக்கப்பட்டவரை அரசியலமைப்புச் சபைக்கு சபாநாயகர் நியமிக்கவில்லை என்றும் அதுவே அரசியலமைப்புச் சபையில் உள்ள பிரச்சினை என்றும் அவர் மேலும் கூறினார். ஆனால் அரசியலமைப்புச் சபை முறையாக இயங்க முடியவில்லை என்று கூறி ஜனாதிபதி அதற்குச் சிறு கட்சிகளைக் குறைகூறுகிறார். அவ்வாறாயின் உண்மையைக் கூறுவது யார்?

ஹர்ஷ டி சில்வா, சித்தார்த்தனைப் பற்றி பாராளுமன்றத்தில் கூறியதைச் சபையிலிருந்த சிறு கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்களும் கேட்டுக் கொண்டு தான் இருந்தார்கள். அவர்கள் அதனை இதுவரை பாராளுமன்றத்துக்கு உள்ளேயோ, வெளியிலோ மறுக்கவில்லை. சிறு கட்சிகளிடையே அவ்விடயத்தில் கருத்து முரண்பாடு இல்லை என்பது அதன் மூலம் தெரிய வருகிறது. அதேவேளை, பரிந்துரைக்கப்பட்டவரைச் சபாநாயகர் அரசியலமைப்புக்கு நியமிக்கவில்லை என்று ஹர்ஷ டி சில்வா கூறியதை சபாநாயகரும் மறுக்கவில்லை என்பதும் முக்கியமான விடயமாகும்.

அரசியலமைப்புச் சபையின் பணிகளை முடக்க அல்லது அந்நடவடிக்கைகள் முடங்கிக் கிடப்பதாக நாட்டு மக்களை நம்பவைக்க ஜனாதிபதிக்குத் தேவை இருப்பதாகத் தெரிகிறது. எனவே அவர் அச்சபைக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயல்கிறார் போலும். சிலவேளை அதன் மூலம் பொலிஸ் மா அதிபர் நியமனம் விடயத்தில் தற்போது அவருக்கு எதிராக எழும் குற்றச்சாட்டுகளை அரசியலமைப்புச் சபையின் பக்கம் திருப்புவதே அவரது நோக்கமாக இருக்கலாம்.

பொலிஸ் மா அதிபராக இருந்த சந்தன தீபால் விக்ரமரத்ன கடந்த சனிக்கிழமை ஓய்வு பெற்றார். ஆனால், அவர் கடந்த மார்ச் மாதமே ஓய்வு பெற வேண்டியதாக இருந்தது. ஏதோ ஒரு காரணத்துக்காக அவரை ஓய்வு பெற விடாமல் ஜனாதிபதி அவருக்கு மூன்று மாத கால சேவை நீடிப்பை வழங்கினார். அதனை அரசியலமைப்புச் சபையும் அங்கீகரித்தது. அந்நீடிப்பு ஜூன் மாதம் 26ஆம் திகதி முடிவடைந்தது. இதனை அடுத்து சுமார் இரண்டு வார காலமாக பொலிஸ் மா அதிபர் ஒருவர் இல்லாமலேயே பொலிஸ் திணைக்களம் இயங்கியது.

பின்னர் ஜூலை மாதம் 9ஆம் திகதி விக்ரமரத்னவுக்கு ஜனாதிபதி இரண்டாவது முறையாகவும் மூன்று மாத கால சேவை நீடிப்பை பரிந்துரை செய்து அரசியலமைப்புச் சபைக்கு அறிவித்தார். அதற்கு அரசியலமைப்புச் சபை ஒப்புதல் வழங்கினாலும் தொடர்ந்தும் விக்ரமரத்னவுக்கு சேவை நீடிப்பு வழங்க முடியாது என்பதையும் ஜனாதிபதிக்கு அறிவித்தது.

அவ்வாறு இருந்தும் அச்சேவை நீடிப்பும் ஒக்டோபர் 9ஆம் திகதி முடிவடையவே ஜனாதிபதி ஒக்டோபர் 13ஆம் திகதி விக்ரமைரத்னவுக்கு மூன்று வார கால சேவை நீடிப்பை சிபார்சு செய்து அதனை அரசியலமைப்புச் சபைக்கு அனுப்பினார். அச்சபை அதனை நிராகரித்தது. அந்நிரகரிப்பை புறக்கணித்து ஜனாதிபதி அவருக்கு சேவை நீடிப்பை வழங்கினார். அந்நீடிப்பு நவம்பர் மாதம் 3ஆம் திகதி முடிவடையவே ஜனாதிபதி அன்றே மீண்டும் அதாவது நான்காவது முறையாகவும் அவருக்கு மூன்று வார கால சேவை நீடிப்பை பரிந்துரைத்தார். அதனையும் அரசியலமைப்புச் சபை நிராகரித்தது. ஜனாதிபதி அந்நிராகரிப்பையும் புறக்கணித்து மீண்டும் சந்தன விக்ரமரதனவுக்கு சேவை நீடிப்பை வழங்கினார். அச்சேவை நீடிப்பு கடந்த சனிக்கிழமை முடிவடையவே விக்ரமரத்ன தாம் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இச்சம்பவ தொடரை அடுத்து, அரசியலமைப்புச் சபையின் ஒப்புதல் இல்லாமல் ஜனாதிபதிக்கு இது போன்றதோர் நியமனத்தையோ அல்லது சேவை நீடிப்பையோ வழங்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில நியமனங்களுக்காகவே ஜனாதிபதி அரசியலமைப்புச் சபையின் ஒப்புதலை நாட வேண்டும் என்றும் சேவை நீடிப்புக்களுக்கு அவருக்கு அவ்வாறான ஒப்புதல் அவசியமில்லை என்றும் ஜனாதிபதியின் சில ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர்.

அரசியலமைப்புச் சபையின் நிராகரிப்பைப் புறக்கணித்து ஜனாதிபதி நியமனங்களையோ, சேவை நீடிப்புக்களையோ வழங்க முடியும் என்றும் அவரது ஆதரவாளர்கள் சிலர் கூறுகின்றனர். தாம் தலைமை தாங்கும் அரசியலமைப்புச் சபையின் நிராகரிப்பைப் புறக்கணித்து ஜனாதிபதி செயற்பட்டதில் எவ்வித தவறும் இல்லை என்று இது தொடர்பாக எதிர்க் கட்சியினர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் கூறினார்.

சேவை நீடிப்புக்களுக்கு அரசியலமைப்புச் சபையின் ஒப்புதல் அவசியமில்லை என்றால் அதேபோல் அரசியலமைப்புச் சபையின் முடிவை புறக்கணிக்க ஜனாதிபதியால் முடியுமாக இருந்தால் தமது பரிந்துரைகளை அரசியலமைப்புச் சபைக்கு அனுப்பாமலே ஜனாதிபதி நியமனங்களையும் சேவை நீடிப்புக்களையும் வழங்கலாமே.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அரசியலமைப்புச் சபையை விமர்சித்தார். அரசியலமைப்புச் சபையின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். அவ்வாறு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டால் விசித்திரமானதோர் நிலைமை உருவாகும். தெரிவுக்குழுவை நியமிப்பதும் சபாநாயகரே. அரசியலமைப்புச் சபையின் தவிசாளரும் அவரேயாவார். அதாவது, தமது தலைமையிலான சபையின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரணை நடத்த சபாநாயகரே தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கிறார்.

அரசியலமைப்புச் சபைக்கு சிறு கட்சிகளால் இன்னமும் பெயரொன்று பரிந்துரைக்கப்படவில்லை என்று ஜனாதிபதி கூறுகிறார். இது இந்த விடயத்தில் தமது செயற்பாடுகளை நியாயப்படுத்தும் முயற்சியாகவே தெரிகிறது. அரசியலமைப்புச் சபை முறையாக நிறுவப்படவில்லை என்றும் எனவே, நான் அதன் நிராகரிப்பை புறக்கணித்து பொலிஸ் மா அதிபருக்கு சேவை நீடிப்பை வழங்கினேன் என்றும் அவர் கூறப் போகிறார் போலும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்க பல முயற்சிகளில் ஈடுபட்ட நிலையில், கடந்த பெப்ரவரி மாதம் அவர் தேர்தல்கள் ஆணைக்குழுவைப் பற்றியும் இவ்வாறே கருத்துத் தெரிவித்தார். தேர்தல்கள் ஆணைக்குழு முறையாக அமையவில்லை என்றும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மத்தியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவதைப் பற்றி ஒருமித்த கருத்து இல்லை என்றும் அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது கூறினார். ஆயினும் அவரது கட்சியும் அப்போது வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தது. அவரது கருத்தை அப்போதைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவாவும் நிராகரித்தார். இப்போது அவர் அரசியலமைப்புச் சபையின் சிறு கட்சிகளிடையே தமது உறுப்பினரைப் பற்றி ஒருமித்த கருத்து இல்லை என்கிறார்.

அரசியலமைப்புச் சபையானது ஜனாதிபதிகளின் எதேச்சதிகாரத்தைக் கட்டுப்படுத்தவே நியமிக்கப்படுகிறது. எனவே, ஜனாதிபதிகள் அதனை விரும்புவதில்லை. சிலவேளைகளில் அவர்கள் அதன் செயற்பாடுகள் முடங்கும் வகையில் நடவடிக்கை எடுத்துவிட்டு தமக்கு வேண்டியவாறு செயற்படுகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது ஜனாதிபதி பதவிக் காலத்தில் ஒரு கட்டத்தில் அவர் அரசியலமைப்புச் சபையின் ஜனாதிபதியின் பிரதிநிதியைப் பரிந்துரைக்கவில்லை. பின்னர் அச்சபை முறையாக அமையவில்லை என்று அச்சபையின் அங்கீகாரமின்றி தமக்கு வேண்டிய நீதிபதிகளை உயர் நீதிமன்றத்துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் நியமித்தார்.

இப்போது அரசியலமைப்புச் சபையின் சிறுகட்சிகளின் பிரதிநிதி நியமிக்கப்படாத போதிலும் அச்சபை இயங்குகிறது என்பது அச்சபை பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்புக்களுக்கு ஒப்புதல் வழங்காமையால் தெரிகிறது. ஆனால் அதனை பாவித்து தமது செயற்பாடுகளை நியாயப்படுத்த ஜனாதிபதி முயல்கிறார்.



## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால், எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி -பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மிதக்கின்றது பாடசாலை



அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்பதனால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் பெய்து வரும் அடை மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளதுடன் அங்கு வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மழை வெள்ளத்தின் காரணமாக இம்மாவட்டத்தின் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளில் உள்ள பல குடும்பங்கள் வெள்ளத்தினால் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.


இதேவேளை, அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அல் பஹ்ரியா மகா வித்தியாலயமும் வெள்ள நீரில் முழ்கும் நிலையில் உள்ளது.

அதனால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வெள்ள நீர் தேங்கி உள்ளமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இப்பகுதியில் வெள்ள நீர் காரணமாக சிறுவர்களும் பாடசாலைக்கு செல்ல சிரமப்பட்டு வருகின்றனர்.

பாறுக் ஷிஹான்

## திருகோணமலையில்







# புதிய கல்வெட்டு கண்டுபிடிப்பு

> **“அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதினால் அவற்றில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகரமானதாகவே பார்க்கப்படுகின்றன**

**எஸ்.கீதபொன்கலன்**

இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாத புதிய கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிப்பு.

தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய முன்னைய வரலாற்றுப் பார்வையை மீள் வாசிப்பிற்கு உற்படுத்தும் அரிய தமிழ் கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கி.பி.13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டு இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகளைக் கூறுகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

புகை படர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றுக்குப் புது வெளிச்ச மூட்டி வருவதில் தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு.

அக்கண்டுபிடிப்புக்களில் கல்வெட்டுக்கள் நம்பகரமான முக்கிய சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றன.

அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதினால் அவற்றிலிருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகரமானதாகவே பார்க்கப்படுகின்றன.

இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

முதலில் இக்கல்வெட்டு பற்றிய செய்தி திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் (J.S.Arulraj) என்பவரால் வைத்திய கலாநிதி த.ஜீவராஜிக்கு (T. Jeevaraj) தெரியப்படுத்தப்பட்டதன் மூலம் அது பற்றிய தகவல் எமக்கும் பரிமாறப்பட்டது.

அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொண்ட நாம் அக்கல்வெட்டை ஆய்வு செய்வதற்கு தொல்லியற் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான பா.கபிலன், வி.மணிமாறன் மற்றும் முன்னாள் தொல்லியல் விரிவுரையாளர் க.கிரிகரன் ஆகியோருடன் திருகோணமலை சென்றிருந்தோம்.

இந்நிலையில், திருகோணமலை மாவட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜூடன் வைத்திய கலாநிதி அ.சதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் நா.சந்திரசேகரம் மற்றும் கோமரன்கடவல பிரதேச செயலக உத்தியோகத்தர் நா.ஜெகராஜ் ஆகியோரும் கல்வெட்டைப் படியெடுக்கும் பணியில் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றியமை எமக்கு மனமகிழ்வைத் தந்ததுடன், அச்சமற்ற சூழ்நிலையில் இக்கல்வெட்டைப் படியெடுக்கவும் வாய்ப்பாக இருந்தது.

இக்கல்வெட்டு திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனி நிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது.

முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்குரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டிட அத்திவாரங்களும் காணப்படுகின்றன.

அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதேநிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது.

இம்மலையின் மேல்பகுதியில் திருவாசி போன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன.

சிவலிங்கத்திற்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்குரிய சக்கரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிடுகின்றார்.

இக்குறியீடுகளுக்கு கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

முதல் இரு வரிகளும், ஏனைய வற்றில் சில சொற்களும் சமஸ்கிருதத்தில் இருக்கின்றன.

கல்வெட்டின் வலப்பக்கத்தில் உள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ்நோக்கி வழிந்தோடும் நீரினால் சிதைவடைந்தும், தெளிவற்றும் காணப்படுகின்றன.

இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வ மிகுதியால் பல சொற்களைப் படித்தனர்.

ஆயினும் கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அது கூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இதனால் தென்னாசியாவின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும், எனது கலாநிதிப்பட்ட ஆய்வு மேற்பார்வையாளருமான பேராசிரியர் வை.சுப்பராயலுவுக்கும், தமிழக தொல்லியற் துறையின் முன்னாள் மூத்த கல்வெட்டறிஞரான கலாநிதி சு.இராஜகோபாலுக்கும் இக்கல்வெட்டுப் படிகளின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன்.

அவர்கள் இருவரும் ஒருவார காலமாக கடும் முயற்சி செய்து கல்வெட்டின் பெரும்பகுதியை வாசித்து அதன் வாசகத்தை தற்போது எமக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அதன் வாசகம் பின்வருமாறு:

01)... ... க்ஷகே ஶ்ரீவிம்[ங்கோ3] நௌ ம்ருகே3 விம்ச0 திப4.

02)…. …..ச0க்தி ப்ரதிஷ்டா2ம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஶ்ரீ …

03) [த்திகள்?] [ஶ்ரீகுலோஸத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழ[ம

04) ண்டலமான மும்முடி] சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க வி-

05) ஜயவாகு தே3வற்கு வீராபி4ஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட-

06) [நேமி பூசை கால]ங்களில் ஆதி3க்ஷேத்ரமாய் ஸ்வயம்பு4வுமாந திருக்கோ-

07) [யிலை]யுடைய நாயநாரை தெ3ண்டன் பண்ணி இன்னாய-

08) நாற்கு ச0[க்தி] ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நா

09) ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பன்னுவித்து நமக்கு [ப்

10) ராப்தமாய்] வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்[துஸ நாட்டில் ல-

11) ச்சிகா[தி]புரம் இதுக்குள் நாலூர் வேச்சர்களுள்ளிட்ட நில-

12) மும் . . .றிதாயாளமு . . .ட்டும் இதில் மேநோக்கிய

13) மரமும் கீநோக்கிய கிணறும்பேருடரை நீக்கி குடிமக்களுள்பட

14) இந்நா[ச்சியார்க்கு திருபப்]படிமாற்றுக்கும் மண்டபக் கொற்று-

15) க்கும்சாந்த்3ராதி3த்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோதகம் ப-

16) ண்ணிக் குடுத்தேன்இ …. லுள்ளாரழிவு படாமல்

17) …ண்ண..ட்ட……ப் பெறுக்கிவுண்டார்கள் [ஆ]ய்

18) நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்

19) மாக . . டையார் பி… கெங்கைக் கரையிலாயிரங்

20) குரால் பசுவைக் கொன்றா[ர்பாவங்] கொண்டார்கள் ஆயிரம் ப்3ரா-

21) ஹ்மணரைக் கொன்றார் பாவ[ங் கொண்]டார்கள் மேலொரு …

22) மாற்றம் விலங்குரைப்பார் .. காலிங்கராயரின் [சொல்படி] … …

23) த்தியஞ் செய்வார் செய்வித்தார்

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரியவந்துள்ளன.

அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம் வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப்போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன.

மேலும், யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்ற காலப் பின்னணி, அது தோன்றிய காலம், தோற்றுவித்த வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும், தெளிவுபடுத்துவதிலும் இக்கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

இக்கல்வெட்டுப் படியெடுத்த காலப்பகுதியிலேயே இக்கல்வெட்டின் புகைப்படங்களை எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களைப் பெற்றிருந்தேன்.

பேராசிரியர் இரகுபதியால் கல்வெட்டின் சில பாகங்கள் வாசிக்கப்பட்டு அதற்குரிய பொருள் விளக்கத்தையும் அவர் அவ்வப்போது எனக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், தமிழக அறிஞர்களால் பெருமளவு வாசித்து முடிக்கப்பட்ட கல்வெட்டு வாசகத்திற்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள் என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன.

தென்னிந்தியாவில் நீண்டகால வரலாறு கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு பத்தாம் நூற்றாண்டிலிருந்து ஒரு பேரரசாக எழுச்சியடைந்த போது அவ்வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர்கள் இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர்.

இது முதலாம் பராந்தகசோழன் காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் இராஜராஜசோழன் காலத்தில் கி.பி. 993 இல் இலங்கையின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது.

கி.பி. 1012 இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெயருடன் பொலன்னறுவைக்கு மாற்றப்பட்டதாகச் சோழர்காலச் சான்றுகளால் அறிகின்றோம்.

சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சியில் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது.

இதன்படி இலங்கை மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன.

திருகோணமலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந்துள்ளன.

அத்துடன், சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்ட சோழரின் ஆட்சி கி.பி.1070 இல் வீழ்ச்சியடைந்தாலும் சோழரின் ஆதிக்கம், நிர்வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந்தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

இதை உறுதிப்படுத்தும் புதிய சான்றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப்படுகின்றது.

பொலன்னறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங்களில் மும்முடிச்சோழ மண்டலம் என்ற நிர்வாகப் பெயரும், தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தருகின்றது.

கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் இப்பகுதியில், சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்க சோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரியவருகின்றது.

மேலும் இவனே கங்கராஜகாலிங்க விஜயபாகுவிற்கு (கலிங்கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதிமுக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இக்கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பேராசிரியர்.சுப்பராயலு இக்கல்வெட்டில் (வரிகள் (3-5) வரும் ‘ஶ்ரீகுலோத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழமண்டலமான மும்முடி சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிஷேகம்’ என்ற சொற்தொடரை புதிய செய்தி எனக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் இந்திரபாலா இத்தொடரில் உள்ள கங்கராஜ காலிங்கவிஜயவாகு என்பவன் 1215இல் பொலன்னறுவை அரசை வெற்றி கொண்டு ஆட்சி செய்த கலிங்கமாகன் (மாகன் மாகோன்) என அடையாளப்படுத்துகின்றார்.

அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்பட்டான் என்பதற்கு 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங்கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து, இலங்கையை வெற்றிகொண்டு பொலன்னறுவையில் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், குலோத்துங்கசோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர்த்தப்பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது.

இக்கல்வெட்டில் கூறப்படும் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த சோழப்படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரநிதியாக இருந்திருக்கவேண்டும்.

ஏனெனில், மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 1178-1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது.

இங்கே கலிங்கமாகன் பொலன்னறுவை இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது.

இதனால் குலோத்துங்க சோழ காலிங்கராயனால் கலிங்கமாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபிஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் நடந்ததெனக் கூறமுடியும்.

பொலன்னறுவை இராசதானியில் நிஸங்கமல்லன் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல்நாட்டுப் படையெடுப்புக்களும் ஏற்பட்டதை பாளி சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இந்நிலையில் சோழ, கேரள, தமிழ்ப்படை வீரர்களின் உதவியுடன் இலங்கை மீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215 இல் பொலன்னறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படுகின்றது.

இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள தலைநகரும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தபோது, கலிங்கமாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றியதாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

ஆயினும், இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெடுத்து வந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துள்ளன.

சில அறிஞர்கள் இவனை மலேசியா நாட்டிலுள்ள கலிங்கத்திலிருந்து படையெடுத்தவன் எனவும் கூறியுள்ளனர்.

இந்நிலையில், தற்போது கிடைத்துள்ள கல்வெட்டில் கலிங்கமாகன் கங்கை வம்சத்துடனும், கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்ற புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

சோழர்கள் தம் திருமண உறவுகளால் கீழைச்சாளுக்கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும், படையெடுப்புகள் மூலம் கலிங்க நாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கலிங்கத்துப்பரணியும், சோழக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரியச்சக்கரவர்த்திகளும் கங்கை வம்சத்துடன் தொடர்புடையவர்கள் என அவ்வரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன.

இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தை கலிங்கமாகனுடன் தொடர்புபடுத்தி பேராசிரியர் இந்திரபாலாவினால் எழுதப்பட்ட அரிய கட்டுரை ஒன்று தற்போது எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையை மக்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இலங்கை ஊடகங்களில் விரைவில் பிரசுரமாக இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டின் 8-10 வரிகளில் வரும் ‘திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து’ என்ற சொற்தொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில் (காமக்கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது.

பேராசிரியர் பத்மநாதன் இது போன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார்

(நாளை தொடரும்)

இஸ்ரேல்

# போர் நிறுத்தம் நீடிப்பு

இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பிற்கு இடையிலான போர் சுமார் 46 நாட்களுக்குப் பிறகு கடந்த வெள்ளிக்கிழமை (24) நான்கு நாள் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது.

இந்த நான்கு நாட்களில் ஹமாஸ் 50 பிணைக்கைதிகளை விடுவிக்க வேண்டும். அதேவேளையில் இஸ்ரேல், தங்கள் நாட்டின் சிறையில் இருந்து 150 பாலஸ்தீனர்களை விடுதலை செய்ய வேண்டும். மனிதாபிமான உதவிப் பொருட்களை அனுமதிக்க வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது.



அதன்படி, பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். இஸ்ரேலும் பலஸ்தீனர்களை விடுதலை செய்து வருகின்றனர். இலங்கை நேரப்படி செவ்வாய்க்கிழமை (28) காலை 10.30 மணியுடன் போர் நிறுத்தம் ஒப்பந்தும் முடிவடைந்தது.

போர் நிறுத்தம் முடிவடைந்ததும், தாக்குதலை தொடங்குவோம் என இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு தெரிவித்திருந்தார். இதனால் எகிப்து, கத்தார், அமெரிக்கா போர் நிறுத்தத்தை நீட்டிக்க பேச்சுவார்த்தை நடத்தின. இந்த நிலையில், போர் நிறுத்தம் மேலும் இரண்டு நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

நான்கு நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு 10 பிணைக்கைதிகளை விடுவிக்க கூடுதலாக ஒரு நாள் போர் நிறுத்தம் நீட்டிக்கப்படும் என இஸ்ரேல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

# இம்ரானுக்கு 14 நாள் நீதிமன்ற காவல்



கடந்த 2019இல் இம்ரான் கான் பாகிஸ்தான் பிரதமராக இருந்தபோது, அல்-காதர் டிரஸ்ட் மூலம் கணக்கு காட்டாமல் முறைகேடாக நன்கொடைகளை பெற்றமை உட்பட பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டதால் கடந்த 2022இல் அவர் பிரதமர் பதவியில் இருந்து விலகினார். தற்போது அவர் மீது பல்வேறு பிரிவுகளில் சுமார் 150க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

கடந்த செப்.26 முதல் உயர் பாதுகாப்புள்ள ராவல்பிண்டி அடியாலா சிறையில் அடைக்கப்பட்டார். அல்-காதிர் டிரஸ்ட் வழக்கில் பல கோடி மோசடி செய்ததாக பாக். ஊழல் தடுப்பு ஆணையம் அவரிடம் விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், அவரிடம் 2 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டு அல்-காதர் அறக்கட்டளை ஊழல் வழக்கில் இம்ரான் கானை 14 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க இஸ்லாமாபாத் சிறப்பு நீதிமன்றம் திங்கட்கிழமை (27) உத்தரவிட்டுள்ளது.

வடகொரியா

# “வெள்ளை மாளிகை, பென்டகனை படம் எடுத்துள்ளோம்”

வடகொரியா கடந்த வாரம் புதிய செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் செலுத்தியது. விண்ணில் செலுத்தப்பட்ட வடகொரியாவின் முதல் உளவு செயற்கைகோள் இதுவாகும்.

இந்த செயற்கை கோள் உளவு பார்த்து பல்வேறு புகைப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

இந்த உளவு செயற்கை கோளானது அமெரிக்காவின் வெள்ளை மாளிகை, பென்டகன் மற்றும் கடற் படை நிலையங்களின் புகைப்படங்களை எடுத்துள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

சென்னை

# விளம்பரத்தால் வந்த வினை




இன்ஸ்டாகிராமில் அழகு குறிப்பு விளம்பரங்கள் போன்றவற்றை பார்த்துவிட்டு சென்னையை சேர்ந்த இளம் பெண்ணொருவர் தனது காதில் உள்ள துவாரத்தை அடைக்க அழகு நிலையத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு கொடுத்த மருந்தை எடுத்துக்கொண்டதால் அப்பெண்ணின் காது அழுகிபோயுள்ளது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து அப்பெண் நீதிமன்றில் தெரிவித்ததாவது, “இன்ஸ்டாகிராமில் விளம்பரத்தை பார்த்துவிட்டு காதில் உள்ள துவாரத்தை அடைப்பது தொடர்பான ஒரு நாள் வகுப்பு சென்றேன்.

இதற்காக ரூ.2,500 கட்டணமாக கொடுத்தேன். நான் பங்கேற்ற வகுப்பில் மற்றவர்களுக்கு காண்பிப்பதற்காக எனது காதில் உள்ள துவாரத்தை அடைகிறேன் என்று கூறி காதில் கிரீம் போல எதையோ தடவி துவாரத்தை அடைத்தனர். ஆனால், துவாரம் அப்படியேத்தான் இருந்தது. நாட்கள் செல்ல செல்ல காதில் அவர்கள் தடவிய கிரீம் மிகுந்த அரிப்பை ஏற்படுத்தி தீராத வலியையும் உண்டாக்கியது. தொடர்ச்சியாக போன் செய்து பார்த்ததில் எவ்விதமான பதில் இல்லாததால் ஒரு வாரம் கழித்து அந்த அழகு நிலையத்திற்கு சென்று பார்த்தேன்.

அங்கு சென்ற பிறகு காது அழுகிய நிலைமைக்கு வந்துவிட்டது என்று கூறி ஒரு ஆயின்மென்ட் கொடுத்து அதை பயன்படுத்துமாறு கூறினார்கள். அப்பொழுது கூட வைத்தியர்களை சென்று சந்திக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லவில்லை.

அவர்கள் கொடுத்த கிரீமை பயன்படுத்தியதால் காது முற்றிலுமாக அழுகி அறுந்து விழுந்துவிட்டது. இது குறித்து விளக்கம் கேட்டபோது, அவர்கள் முறையாக விளக்கம் அளிக்கவில்லை எனவே பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்தேன்” என தெரிவித்துள்ளார்.

கேரளா

# கடும் சரிவை சந்திக்கும் குழந்தை பிறப்பு வீதம்



பிறப்பு வீதம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பிறந்தவர்களின் எண்ணிக்கையை அளவிடும் முறையாகும்.

இந்தியாவில் இயற்கை வளங்கள் மிகுந்த மாநிலமாக திகழ்வது கேரள மாநிலம். மக்கள்தொகை பெருக்கத்திலும் அது பெரிய மாநிலமாகவே இருக்கிறது. 2011இல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 33 மில்லியன் மக்களுடன், மக்கள்தொகையில் 13ஆவது பெரிய மாநிலமாக கேரளா இருந்தது.

இந்நிலையில், தற்போது அங்கு குழந்தை பிறப்பு வீதம் கடும் சரிவை சந்தித்து வருகிறது. கேரள மாநிலத்தில் கடந்த 2011ஆம் ஆண்டு குழந்தைகள் பிறப்பு வீதம் அதிகரிப்பு பெரிய அளவில் இருந்தது. அந்த ஆண்டில் அங்கு 5 இலட்சத்து 60 ஆயிரத்து 268 குழந்தைகள் பிறந்துள்ளன.

ஆனால், அதன்பிறகு குழந்தைகள் பிறப்பு வீதம் படிப்படியாக குறைய தொடங்கியுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு 4 இலட்சத்து 80 ஆயிரத்து 113 குழந்தைகளே பிறந்துள்ளன. 2021ஆம் ஆண்டில் 4 இலட்சத்து 19 ஆயிரத்து 767 குழந்தைகளே பிறந்துள்ளன.

2011ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 40 ஆயிரத்து 501 குழந்தைகள் குறைவாக பிறந்துள்ளன. இது 25 சதவீதம் குறைவாகும். கடந்த 10 ஆண்டுகளில் கேரளாவில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிறக்கும் குழந்தைகள் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# சர்வதேச கராத்தேயில் பங்கேற்கும் கற்பிட்டி நிர்மலா கல்லூரி மாணவர்



அஸ்ஹர் இப்றாஹிம்

புத்தளம், கற்பிட்டி நிர்மலா மாதா தேசிய கல்லூரியில் தரம் 8இல் கல்வி பயிலும் மெனுஷா செவ்சிதா, ஆஷாரா விஷ்மி ஆகிய இரண்டு மாணவரும் இந்தியா விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள சர்வதேச கராத்தேயில் பங்கேற்க தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# யுனைட்டெட் செல்லும் திமோ வேர்னர்?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக்கின் முன்களவீரரான திமோ வேர்னரைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் எதிர்பார்த்துள்ளது.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டி உள்ளிட்ட கழகங்களும் 27 வயதான வேர்னரை அடுத்தாண்டு ஜனவரியில் கடனடிப்படையில் கைச்சாத்திட ஆர்வமாயுள்ளபோதும், பருவகாலத்தை முடித்து விட்டே வேறு கழகங்களுக்குச் செல்ல வேர்னர் எதிர்பார்க்கிறார்.



# ஜனவரியில் தீர்மானிக்கப் போகும் தமிம் இக்பால்

சர்வதேச கிரிக்கெட்டில் தனது எதிர்காலம் குறித்து தீர்மானமெடுப்பதற்காக அடுத்தாண்டு ஜனவரி மாதம் வரையில் பங்களாதேஷின் முன்னாள் அணித்தலைவர் தமிம் இக்பால் காத்திருக்கவுள்ளார்.

தனது எதிர்காலம் குறித்த அறிவிப்பை, பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் ஹஸனின் அழைப்பிலேயே தாமதப்படுத்துவதாக இக்பால் கூறியுள்ளார்.






பிரிவு மூன்று கிரிக்கெட் தொடரில்

# இரண்டாம் சுற்றில் கல்முனை சாஹிரா

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்குட்பட்ட பிரிவு மூன்று கடினபந்து கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டிக்கு கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

மட்டக்களப்பு, கல்லடி, சிவானந்தாதேசிய பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற மட்டக்களப்பு புனித மைக்கல் தேசிய கல்லூரியுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இரண்டாவது சுற்றுக்கு கல்முனை சாஹிரா தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய புனித மைக்கல் கல்லூரி 27 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 93 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சாஹிரா 17 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 29, நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.